# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)



## 'நொறுங்கி வாழாமல்' ஜீவன் இல்லை, பிறருக்கும் ஜீவன் இல்லை!

தேவன் மெய்யாகவே "நொறுங்குண்டவர்களை மாத்திரமே" பயன்படுத்துகிறார். நளதப்பெட்டி உடைந்த பிறகுதான் "சுகந்த வாசனை" புறப்பட்டு சென்று அந்த வீடு முழுவதையும் சுகந்த வாசனையால் மணக்கச் செய்தது. இதற்கு மாறாக நம் சொந்த ஜீவியத்தை அல்லது சுய-கௌரவத்தை 'நொறுங்கிட அனுமதியாமல்' அதை வைத்திருக்க நாடுவோமென்றால், நம் சொந்த ஜீவனை இழப்பது மாத்திரமல்லாமல், இன்னமும் ஆதாயப்படுத்தி இரட்சிக்கப்பட வேண்டிய ஜனங்களின் ஜீவனையும் நாம் இழந்து விடுவோம்!

ஜீவிய ஜெயத்திற்கு, இதுவே இரகசியம்!

-tr

பெட்டகம் 41 பரல்கள் 06 ஜுன் 2025



## உத்தம சபைக்கு 'பணம்' ஓர் முக்கிய பங்கல்ல!

**ப**ணத்தைப் பற்றியோ, பொருளைப்பற்றியோ, இயேசு பேசும்படி நேரிட்ட சமயங்களிலெல்லாம், உலகப்பொருளைக் குறித்த அவருடைய கண்டிப்பான எச்சரிப்பைத்தான் கேட்கிறோம்! இப்படி சொல்வதினாலே பணம் வேண்டியதேயில்லை என்பது நமது கருத்தல்ல. பணத்தேவைகளை கர்த்தர் அறிந்து, அதை 'எந்த வழியிலும்' பூர்த்தி செய்வார்! சபையில், தெய்வ பயத்தில் நிலைத்திருக்கும் ஏழை பரிசுத்தவான்களின் குறைவான காணிக்கையை ஆசீர்வதித்து சபையின் அனைத்து தேவைகளையும் சந்திப்பார்! இருப்பினும் ஒரு உத்தம தேவ சபை, பணத்திற்குப் பின்பாகவோ பணக்காரர்களுக்குப் பின்பாகவோ ஒருக்காலும் போய்விடக்கூடாது!

ஆம், பாவிகளை இரட்சிக்கும் வல்லமை பணத்துக்கு இல்லை. தேவ ஈவாகிய பரிசுத்த ஆவியைப் பணத்தினால் வாங்க நினைத்த சீமோனை, அன்று பேதுரு பலமாய் கண்டித்தார். ஆவிக்குரிய ஊழியரால் ஆவிக்குரிய வேலை நடக்கும்போது, ஆண்டவர் அவர்களை ஆதரிக்காமல் விடார்! "வேலையாள் தன் கூலிக்கு பாத்திரனாய் இருக்கிறான்" என்றும் "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு, சுவிசேஷத்தினாலே பிழைப்புண்டாக வேண்டும்" என்றும் கட்டளையிட்ட கர்த்தர், தமது உத்தம ஊழியரையும் அவர்கள் ஊழியத்தையும் இன்றும் என்றும் 'பொருள் விஷயத்தில்' ஒருக்காலும் கைவிடவேமாட்டார்!

*-Ed*

**2025 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170**/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஜுன் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall mcf

## ‘தடை செய்த மரங்கள்’ சாலையோரம் ஒதுங்கியதே!

*புயலின் ஓசை ‘ராஜா வருகிறார்’ முழக்கமாகட்டும்*

*ஓ தேவனுடைய பிள்ளையே, ‘ஓர் முழு ஜெயமான அணிவகுப்பில்’ நீ இருப்பதாக எண்ணிப்பார். அன்றொருநாள், இஸ்ரவேலின் ஜெய கெம்பீரத்தைக் கண்ட சிறு பிள்ளைகளுடைய கூட்டங்கள் ஆச்சரியத்தால் வாய் புதைத்து, தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்த அறியாமல் அந்த அணி வகுப்பில் சென்று கொண்டிருந்தார்கள்! தங்கள் யாவருக்கும் வர இருந்த "மரணத்தைவிட மோசமான" முடிவிலிருந்து அற்புதமாய் காக்கப்பட்டு,* **வெற்றி பவனியில்** *தாங்கள் சென்று கொண்டிருப்பதை இஸ்ரவேலின் பெற்றோர்களும், ஸ்திரீகளின் கூட்டத்தாரும் வியந்து வியந்து கண்டார்கள்.*

*இத்தனை அதிசயமான நிகழ்ச்சிக்கு காரணம் என்ன தெரியுமா? சிந்தனைக்கும் எட்டாத* **செங்கடலை,** *இஸ்ரவேல் ஜனங்கள் போவதற்கு வெட்டாந்தரை வரை பிளந்து, அவர்களை நடத்திச் சென்ற மோசேயைப் பார்த்து "புறப்பட்டுப்போங்கள்!" என்ற சர்வ வல்ல கர்த்தரின் கட்டளையே காரணமாகும்! (யாத்.14:15). இருபுறமும் மதில்போல் கடலை இரண்டாகப் பிளந்த அதிசயத்தை கண்ணாரக் கண்ட இஸ்ரவேல் புத்திரர்கள் அனைவரும் ஸ்தம்பித்துப் போனார்கள்!*

*"ஒரே ஒரு தேவமனிதன் மோசேயின்" விசுவாசத்தை வைத்து, தேவன் செய்த அற்புத செயல்! இவ்வளவு காலமாய் கர்த்தருடைய உத்தம ஊழியன் மோசேயை நம்பாமல், சர்வ வல்ல தேவனையும் நம்பாமல் வாழ்ந்துவிட்ட அவர்களின் ஜீவியம், அவர்களுக்கு மிகுந்த வெட்கத்தைக் கொண்டு வந்து தந்தது!*

*கர்த்தருடைய கட்டளைக்கு அப்படியே மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்து விட்டால், என்ன நடக்குமோ? என்ற பயம் உங்களுக்கு உண்டோ? ஆக்ரோஷமாக சீறும் கடலின் சீற்றம், உங்களுக்கு பயத்தை ஏற்படுத்தி விட்டதா? அன்று ‘பார்வோன் சேனையைப்போல்’ பின்னால் துரத்திவரும் எதிர்ப்புகளுக்கு அஞ்சுவது சரிதானோ?*

"**இதுபோன்ற பயத்திற்கு, வேறொரு அர்த்தத்தை வேதம் கூறுகிறது: உங்கள் பெருமையினால் கர்த்தரை அவமதித்தீர்கள் உங்கள் வளர்ச்சிக்கு நீங்களே தடையாக நிற்கிறீர்கள்! ஆகிய இந்த காரணங்கள், உங்களைப் பற்றியிருக்கும் அவிசுவாசமே என அறிந்து மனம் திரும்புங்கள்!**

*சமுத்திரத்தின் கொடிய சீறலின் சத்தத்திற்கு மேலாய் "கர்த்தர் என்றென்றும் ராஜரீகம் செய்கிறார்!" என்ற முழக்கமே உங்கள் செவிகள் கேட்கும் தொனியாய் எப்போதும் மாறுவதாக!*

*பொங்கிவரும் புயல், கர்த்தர் புறப்பட்டு வரும் வஸ்திர தொங்கலின் 'சலசலப்பே' ஆகும். அதுவே, "***இதோ ராஜா வருகிறார்***" என்ற ஜெயத்தின் அடையாளமாய் கண்டுகொள்ளப் பழகிக் கொள்ளுங்கள். அவரை நம்பி வாழ ஏன் தயங்குகிறீர்கள்? சர்வ வல்லவரை பின்பற்ற பயம் ஏற்படுவது நியாயம் தானா? உங்கள் முன்னேற்றத்தைத் தடுத்து நின்ற அத்தனை மரங்களும் விசாலமான சாலையை உண்டாக்கி, சாலையின் இருபுறமும் அசைந்தாடும் மரங்களாய் மாறிவிட்டதைப் பாருங்கள்!*

*இனியும் 'செங்கடல் கண்டு' மிரட்சி வேண்டாம்! முன் செல்லவும் வழி இல்லை, பின் செல்லவும் இயலாது, என்ற தயக்கத்தில் 'அச்சம் முற்றிலும் அகலுமட்டும்' கர்த்தருக்கு காத்திருங்கள். அவர் வருவார், சூழ்ந்திருக்கும் செங்கடலைப் பெருங்காற்று அனுப்பி, இருமறுங்கும் மதிலெனப் பிரித்து நிறுத்திவிடுவார்!*

*இப்போது "***இனி, புறப்பட்டு போங்கள்!***" என்ற ராஜாவின் கெம்பீர சத்தம் உங்கள் காதுகளில் முழங்கும்! அந்த கெம்பீர பாதையில் 'இருமறுங்கும் மதிலாய் நின்ற சமுத்திர வெள்ளம்' "நீங்கள் பாதை கடக்கும்வரை" சரிந்து விழாது! சமுத்திரத்தின் ஈரம்கூட, உங்கள் காலில் ஒட்டாமல், முன்னேறிச் செல்ல நடத்துவார்!*

*நீண்ட பயணம் சென்றதுபோல் தோன்றினாலும் 'சேர வேண்டிய சுக ஸ்தலம்' விரைவாய் வந்துவிட்டதே! உண்மைதான், வாழ்க்கையின் பாதை 'முடிவில்லா கடினம்' என தேவனை அறியாதவர்கள் கூறலாம்! நாமோ 'எல்லாவற்றிற்கும் முடிவு உண்டு, அது நலமான முடிவே' என்பதை அனுபவித்திருக்கிறோம்.*

*இப்போது "சமுத்திரமோ, எகிப்தியரோ, புயலோ...." காணப்படவில்லை! கர்த்தரை மாத்திரமே கண்டு, அவரைத் துதிபாடி ஆனந்திப்பீர்கள்! இந்த ஆனந்த ஸ்தலமே, அவர் உங்களை நடத்தி சேர்த்திட விரும்பிய ஸ்தலம்! ஆமென்.*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

## என்ன! அடித்தளத்தில் வெறுப்பு, மேற்தளத்தில் அன்பா?

*'இரட்டை வேட' சபைகளை பாதாளம் மேற்கொள்ளும்*

ஒரு மனுஷன் தன்னுடைய பாவத்தை முற்றிலும் அகற்றாமல், பாவத்தை சற்று 'மழுக்கி' வைத்துக் கொள்வது உத்தம கிறிஸ்தவம் அல்ல! இன்னும் சிலர் 'அந்தப் பாவத்திற்கு' பதிலாக 'இந்தப் பாவத்தை' வைத்துக் கொண்டார்கள். இது இன்னமும், கிறிஸ்தவத்திலுள்ள பெரும் அபாயமாகும்.

*ஒரு இடத்தைவிட்டு, இன்னொரு இடத்தை மாற்றிக் கொள்வது மனந்திரும்புதல் அல்ல! தூரதேசத்தில் பன்றிகளோடு வாழ்ந்தவன், இப்போது கிறிஸ்தவ மார்க்கத்தாரோடு சேர்ந்து நின்று விட்டபடியால் அது மனந்திரும்புதல் என்று கூறலாமா? ஒருவேளை, அவன் ஸ்தலத்தை மாற்றியிருக்கலாம், ஆனால் அவன் இருதயத்திலோ மெய்யான மாற்றமோ, தூய்மையோ இல்லை!*

அதுபோலவே, கிறிஸ்தவ உலகில் உலாவி வரும் **பெருமையும்** இருக்கிறது. தங்களுக்குத் தெரிந்த ஆவிக்குரிய உச்சரிப்புகளை கூறிக்கொண்டு "தன் இருதய ஆழத்தில் சுய - அன்பை" மறைத்து மாயம் செய்யும் இவர்களை தேவன் வெறுக்கிறார்! இவர்கள் தேவனுடைய பார்வையில், அருவருக்கத் தகுந்த தங்கள் ஜீவியத்தை சுத்திகரிக்காமல் "அருவருப்புகளை கீழ் - தளமாய் வைத்துக் கொண்டு" மேல் தளத்தில் தங்களுக்கு இஷ்டமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ துணிந்தவர்கள்!

> **"அதுபோலவே, காலமெல்லாம் புறங்கூறி, போகும் இடமெல்லாம் பிரச்சனை உண்டாக்குகிறவர்கள், மனந்திரும்பியதாக கூறிக் கொண்டு "ஆவிக்குரிய ஆலோசகர்களாக" தேவ சபையில் நின்றிட முடியும். அவர்களை உற்றுநோக்கினால் "இளைப்பாறுதல் அற்றவர்களாய்" தங்கள் புத்திசாலியான ஆவியோடு சபையில் தாண்டவமாடுவதை காண முடியும்!**

தொந்தரவு செய்பவர்களை சபையில் கொண்டு வந்து நிறுத்தி, சபையை பின்வாங்கச் செய்வதிலும், பலவீனப்படுத்துவதிலும், பிரிவினை ஏற்படுத்துவதிலும், சாத்தான் மிக தந்திரமாய் கிரியை செய்கின்றான்! ஒரு சபை பரிசுத்தத்திலும், தாழ்மையிலும், சத்தியத்திலும், அன்பிலும் வேரூன்றி இல்லாத பட்சத்தில், இதுபோன்ற சபைகளை, பாதாளத்தின் வாசல்கள் மேற்கொண்டுவிடும். மெய்யான உத்தம கிறிஸ்தவ சபைகளை மாத்திரமே, பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்வதில்லை! ஆமென்.

*- A.W.டோசர்*

## 'திருமணமாகி ஒரு வருடத்தில்' மேடம் குயான் கூறிய சாட்சி!

*குணசாலியாய் பிரகாசித்த அம்மையார்*

என் திருமண வாழ்க்கை, ஒரு வருடத்தை கடந்து சென்றது! ஆகிலும், நான் அடைந்திருக்க வேண்டிய தெய்வ தன்மையை, இந்த ஒரு வருட குடும்ப வாழ்வில் அடையவில்லையோ? என்றே கருதினேன். என் கணவரின் வீட்டில், என்னைச் சூழநின்று பகைத்தவர்களுக்கு முன்பாக ஓர் 'ஆச்சரிய பொருளாகவே' நான் நின்றேன். அவர்கள் என்னிடம் நடந்து கொண்ட விதங்கள் கடுகளவும் காரணமற்றதாகவே இருந்தது! எனது மாமியாருடைய வயதை ஒப்பிடும்போது, அவர்கள் என்னை துன்புறுத்தியதை விட, வயதில் மிக இளமையான பணிப்பெண்கள் என்னை நடத்தியவிதம், அவர்கள் தங்களது முகத்தை முறித்துக் கொண்டு போன செயல்கள், எனக்கு அதிக வேதனை தருவதுபோல் உணர்ந்தேன். இதுபோன்ற முரண்பாடான சூழ்நிலையில், என் உள்ளம் ஜெபத்தையே நாடியது.....

*"ஆகிலும் என் தேவனே, நீர் என் கண்களைத் திறந்து, இவ்வித சூழ்நிலைகளில்பக்தியானவெளிச்சத்தைக்காணும்படி செய்ததற்காக உமக்கே ஸ்தோத்திரம்!* ***ஆம், ஒவ்வொரு பாடுகளிலும் ஓர் தெய்வீக காரணம் இருப்பதை நான் கண்டு கொண்டேன்!*** *உண்மைதான், இந்த உலகத்திலுள்ள எந்த ஒரு ஜீவராசியின் துன்பங்களுக்கும் ஒரு காரணம் இருப்பதாக நான் இதுவரை பார்த்ததில்லை. நான் துன்பத்தில் ஓரிரு நடை சென்ற பிறகு, யாதொரு முகாந்திரமும் இல்லாமல் எனக்குச் சம்பவிக்கும் துயரங்கள் எனக்குத் தேவையென்றே உணர்ந்தேன்! உம் முகத்திற்கு முன்பாக நான் கண்ட இந்த அறிவு, என்னை எவ்வளவாய் மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டது! என் தந்தையின் வீட்டில் ஓர் இளவரசியாய் வாழ்ந்த எனது மேனியின் அழகை வருவோர் போவோர் புகழ்ந்து பேசியதைப் போல், என் கணவர் வீட்டில் புகழப்பட்டிருந்தால், சொல்லி முடியாத அகந்தையிலும் பெருமையிலும் சிக்கியிருப்பேன்! நீர் நடத்தும் சீரான நித்திய பாதைக்கு நன்றி!*

என ஜெபித்து, மகிழ்ச்சியின் கண்ணீரில் நான் ஆழ்ந்து போனேன்.

எனது முதல் குழந்தை பிறக்க வேண்டிய சமயத்தில், என் கணவரின் ஜமீன் சொத்துகளுக்கு வாரிசு வரப்போவதை எண்ணி மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஆனால் ஏனோ தெரியவில்லை, குழந்தை பெற வேண்டிய அந்த தருணத்தில், இன்பமான ஆனந்தத்திற்குப் பதிலாய், என்னிடம் மிக கடுமையாய் நடந்து கொண்டார்கள். இந்த

நேரத்திலும் அவர்களது சுபாவம் கொடூரமாய் மாறியதைக் கண்டு 'ஒரு பொய்யான கோபத்தை வரவழைத்து' அதை என் முகத்தில் காட்டினேன். அந்தப் பொய்யான சாதாரண கோபத்தைக் கூட அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாதிருந்ததையும் நான் கண்டேன். இதைக் கண்ட நான், உடனே மனந்திரும்பி 'மீண்டுமாய்' என்னுடைய அனைத்து துன்பங்களையும் தேவனிடம் மாத்திரமே கொடுத்து விடுவதற்கு, என்னை திடப்படுத்திக் கொண்டேன்.

எனக்கு பெண் குழந்தை பிறந்தவுடன், ஒரு விஷக்காய்ச்சல் எனக்கு வந்தது. நான் பல வாரங்களாய் படுக்கையில் அசைவது கூட இயலாமல் வேதனை அடைந்தேன். அந்த விஷக்காய்ச்சல் சுகமாகி வந்த நேரத்தில், என் மார்பகத்தின் இருபுறமும், இரண்டு சிலந்தி கட்டி தோன்றியது. அது எனக்கு மிகுந்த வலியைக் கொடுத்தது!

> “ **ஆகிலும், என் சரீரத்திற்கு ஏற்பட்ட சுகவீனங்கள், எனக்கு எவ்வித அச்சுறுத்தலையும் தரமுடியவில்லை!**

இருப்பினும், நல்ல சுகம் அடைந்தவுடன், கடை வீதிகளில் நடந்து சென்ற நேரத்தில், என் வசீகரமான முகத்தின் மாயையை திரைவிலக்கிக் காட்ட துணிந்தது போல் நடந்தேன். என் கை உறைகளை கழற்றிவிட்டு அதின் நளினத்தை மற்றவர் காண வீசி நடந்தேன்! அப்படியொரு கேடான சரீர சுகவீனத்தில் தப்பிவந்த நான், என் சரீர மாயைகளை மேன்மைபாராட்டி நடந்ததைக் கண்டு, வீட்டிற்குத் திரும்பியதும் கதறி அழுதேன்: “ஓ கர்த்தாவே, மாயைக்கு இப்படியும் ஒரு மதியீனம் இருக்கிறதே!” என வேதனையுடன் **மனம் கசந்து ஜெபித்து விடுதலையானேன்.**

இந்த சூழ்நிலையின் மத்தியில், என் கணவரின் தொழில் வெகுவாய் நஷ்டமடைந்தது. இருப்பினும், பொருளாதார நஷ்டம் சிறிதளவு கூட என்னை பாதிக்கவில்லை. ஆனால் வீட்டிலுள்ள அனைவருமே, **இந்த பொருளாதார நஷ்டத்திற்கு நான்தான் காரணம் போல்** என்னை மையமாய் வைத்து தாக்கிப் பேசியதுதான் நூதனமான சிலுவையாய் சந்தித்தேன். இந்த உலக தற்காலிக ஆசீர்வாதங்களை இழப்பதை “ஒரு தியாகமாய் எண்ணிட” என்னால் முடியவில்லை. திரண்ட ஆஸ்தி எனக்கிருந்தாலும் 'அன்றன்றுள்ள அப்பத்தை' தேவனிடம் கேட்பதையே என் பழக்கமாய் கொண்டிருந்தேன். இருப்பினும், பொருளாதார நஷ்டம் என் மாமியாருக்கு தாங்க முடியாத வேதனையாய் இருந்தது. என் அந்தரங்க ஜெபவாழ்க்கையை அறிந்திருந்த என் மாமியார், 'பொருளாதார நஷ்டம் நீங்கும்படி நீ

*ஜெபிக்க வேண்டும்' என என்னிடம் கூறினார். ஆனால், பொருளாதார நஷ்டத்திற்கு ஜெபித்திட என்னால் முடியவில்லை......*

**"ஒ என் பிரிய கர்த்தாவே, இந்த உலகத்திற்காகவும் அதில் உள்ளவை களுக்காகவும் என்னால் ஜெபித்திட முடியவில்லை! மாறாக: பரிசுத்தமான உறவோடு ஜெபத்தில் நெருங்கி வாழ்ந்த எனக்கு..... என் ராஜனே, இந்த மண்ணின் அழுக்கை உம் சமூகத்திற்கு கொண்டுவர என் மனம் முற்றிலும் மறுக்கிறது! அதற்குப் பதிலாய், இந்த உலக ராஜ்ஜியம் தரமுடியாத, உமது சமூகத்தின் மகிழ்ச்சிக்காகவும், உம் தூய அன்பிற்காகவும், உலக நஷ்டம் எவ்வளவு இருந்தாலும் அதை முழுவதும் துறந்துவிடவே என் மனதார நாடுகிறேன்! ஒ கர்த்தாவே, என் முழுமையையும் தியாக பலியாய் உமக்கே தந்துவிட்டேன். கர்த்தாவே, உமக்கு பிரியமில்லாமல் இருப்பதை விட...... என் குடும்பம், வெறுமை அடைந்து குறைந்து போனாலும், அதை என் மனதார ஏற்றுக் கொள்கிறேன்" என்றே ஜெபித்தேன்.**

*இவ்வாறு என் ஆவிக்குரிய நிலையில் நான் ஜெபித்திருந்தாலும், உலகப்பிரகாரமாக என் மாமியாரை மனதார ஏற்றுக்கொள்ள முகாந்திரம் கண்டேன்: அதுஎன்னவெனில், "நானும் என் மாமியாரைப்போல் பணத்தை தேடி, அதை மிச்சப்படுத்தி சேமிக்கும் பெண்ணாயிருந்தால், என் மாமியாரிடம் வேறுபாடு கொண்டிருக்க மாட்டேன். நானோ, விதைக்காத இடத்தில் அறுப்பதும், என்னை நேரடியாக பாதிக்காததைக் குறித்து அக்கறையற்றிருப்பதும் எனக்கு ஏற்றது அல்ல! எனக்கூறி, என் மாமியார் பெலவீனத்தை ஒரு பொருட்டாய் எண்ணாமல் தள்ளிவைத்து விட்டேன். இருப்பினும் என் ஆவிக்குரிய நிலையில்,* **என் கணவருக்கு ஏற்பட்ட எந்த நஷ்டமும் என்னை பாதிக்க முயன்றதை மனதார மறுத்துவிட்டேன்.**

*இந்நிலையில் என்னுடைய மாமியார் அதிகமான நிந்தை தரும் சொற்களை என்னிடம் பேசினார்கள்: "இவள் என் மருமகளாக வீட்டிற்கு வரும் நாள் வரைக்கும், எங்கள் வீட்டில் எந்த துயரமும் ஏற்படவில்லை. இவள் வீட்டிற்கு வந்து சேர்ந்த நாள் முதல், ஏராளமான இன்னல்கள் தொடர்ந்து வர ஆரம்பித்துவிட்டன!" போன்ற சஞ்சலமான வார்த்தைகளை அடிக்கடி பேசினார்கள். இதன் நடுவில், என் தாயார் என்னிடம் "நீ திருமணமானவுடன், கணவன் வீடே கதி என்று உள்ளாய்! உன் தாய் தந்தையரை அடியோடு மறந்து விட்டாய்! உன் கணவரிடம் சண்டை போட்டாவது, அடிக்கடி வீட்டிற்கு வந்து செல்!" என அழைத்தார்கள். என் தாய் கூறிய இதுபோன்ற,*

*அறிவுரைக்கு என்னால் துளிகூட கீழ்படிய முடியவில்லை!*

*என் கணவருக்கோ, நஷ்டத்தின் மேல் நஷ்டம் வந்தது. அவர் நடத்தி வந்த 'எல் - விடுதி வில்லா' பெருந்தொகை நஷ்டத்தை கண்டது. கணவருக்கு ஏற்பட்ட பொருளாதார நஷ்டம், பெரும் புயலாய் என்மீது வீசச் செய்தது. இதுபோன்ற நிலையில், நல்ல புத்தியும் ஆறுதலும் கூறி 'நான் மீண்டும் பெலன் பெற உதவிட, எனக்கென்று தரப்பட்ட' ஒரு சகோதரியை நான் நாடுவது உண்டு. துரதிருஷ்டமாய் ஒரு சில மாதங்களுக்கு முன்பே அந்த சகோதரி மரித்துவிட்டார். துன்ப நேரத்தில் நல்ல புத்தி சொல்லும் சகோதரியை இழந்தது மனதிற்கு வேதனையாய் இருந்தது.*

> "என் வீட்டார் என்னிடம் நடந்துகொண்ட விதங்கள் முகாந்திரமற்றதாயிருந்தாலும், அதை உலக கண்ணோட்டத்தோடு நான் பார்க்கக் கூடாது என நான் தீர்மானித்தேன். எனவே, ஆவிக்குரிய கண்ணோட்டத்தோடு உயர்ந்த பார்வையை பெற்று, நடப்பவைகள் அனைத்தும் தேவனுடைய கரத்திலிருந்து வந்தது என்பதையும்! அனைத்தும் என்னுடைய நித்திய நன்மைக்காகவே எனக்குத் தரப்பட்டுள்ளது என்பதையும்! நான் கண்டுகொள்ள..... உறுதியான தீர்மானம் எடுத்தேன்!

*ஏதோ ஒரு அனல் குன்றிய மாயை, என் உள்ளத்தை ஆட்கொண்டது! என்னில் வாசம் செய்த மாயைக்கு 'சவுக்கடி' தர தீர்மானித்தேன். இனிமுதல் என் தலைமுடிக்கு 'பெயிண்ட் - சிங்காரம்' இனி தேவையில்லை என என் பணிப்பெண்களிடம் கூறினேன்! அடிக்கடி கண்ணாடி முன் நிற்கும் பழக்கத்தை மறுத்து, எப்போதோ ஒருமுறை மாத்திரம் என் உருவத்தை கண்ணாடியில் பார்த்து சரிசெய்து கொண்டேன்! 'பல' ஆவிக்குரிய புத்தகங்களைப் படித்த நான், நடைமுறையில் வாழ்ந்து பிரகாசித்த பரிசுத்தவான்களின் 'ஒரு சில' புத்தங்களை மாத்திரம் படிக்கத் தொடங்கினேன். குறிப்பாக, தாமஸ் கெம்பீஸ் புத்தகங்களையும், பிரான்ஸிஸ் தி சாலஸ் புத்தகங்களையும் சத்தமிட்டு வாசித்துப் படித்தேன்.*

*என் தலைமுடி சீவுவதற்கு வந்த பணிப்பெண்கள், நான் வாசித்த வாசகங்களைக் கேட்டு மனம்மாற்றம் பெற்றார்கள். வேறுசில பணிப்பெண்கள், நான் சத்தமாய் வாசித்த வாசகங்கள் பிடிக்காமல், கோணலாய் அழகற்ற விதத்தில் என் தலைமுடியை வாரிச் செல்வார்கள். பணிப்பெண்கள், என் தலைமுடியை கோணல் - மாணலாய் வாரி வைத்திருந்தாலும், ஆலயத்திற்கு வரும் அதிகமான பெண்கள் என்மீது*

*இன்னமும் பொறாமை கொண்டார்கள். இந்த நிலையில்,* **நான் அவர்களின் பொறாமையை பார்த்திருக்கக் கூடாது, என்றே என் மனதில் ஆழமாய் உணர்த்துவிக்கப்பட்டேன்!** *ஆகவே ஒவ்வொருமாதமும் என் ஆவிக்குரிய நிலையில் நான் எவ்வளவு தேர்ச்சி பெற்று வருகிறேன் என்பதை ஒரு காகித தாளில் எழுதிப் பார்க்கத் தொடங்கினேன். அப்போதுதான், என் பரிதாப நிலை எனக்குத் தெரிந்தது..... நான் எவ்வளவாய் என் சொந்த முயற்சிகளை நம்பியுள்ளேன்! கர்த்தருடைய ஊழியத்தை எவ்வளவு குறைவாய் செய்கிறேன்! நான் விரும்பிய அளவிற்கு நான் இன்னமும் கிறிஸ்துவின் சாயலை அடையவில்லை!.... என்பதை கண்டுபிடித்து தேவனுடைய முகத்திற்கு நேராய் தீவிரமாய் மனந்திரும்பினேன்!*

*இவ்வளவு அதிகமான மாற்றத்தை, என் ஒரு வருட திருமண ஜீவியத்தில் பெற்றது, எனக்கு ஆசீர்வாத ஊற்றாய் மாறியது!*

*- மேடம் குயான்*

---

## ‘அற்ப விசுவாசிகள்’ கவலை கொண்டிருப்பார்கள்!

*‘இவன் அவிசுவாசி’ என கர்த்தர் கூறாதிருப்பாராக*

*நீங்கள் கவலைப்படக்கூடாது என்பதை வலியுறுத்தும்படி ஆண்டவர் இயேசு மற்றொரு விளக்கத்தைக்கூறினார்: “உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்.* **அற்ப விசுவாசிகளே!** *இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?” (மத்.6:28,29,30) என இயேசு கூறினார்.*

*ஒரு சில ஜனங்களுக்கு, இந்த உலகத்திலேயே அதிக முக்கியமான இடம் என்னவென்றால் “அவர்களுடைய பீரோ அல்லது துணிமணி வைத்திடும் அலமாரிதான்”. இவர்களுக்கு ‘என்னத்தை உடுப்போம்’ என்பது போன்ற கவலை இல்லை என்பது உண்மைதான். ஆனால் அதற்குப் பதிலாய், பொருள் படைத்த இந்த மக்களுக்கு ‘தங்களுக்கு இன்னும் அழகுள்ள வஸ்திரம் வேண்டுமே’ என்ற தவிப்பதுதான்.*

“ **நன்றாய் அறிந்துகொள்ளுங்கள்: நாம் வாழும் இந்த சமுதாயத்தில்**

எல்லோருக்குள்ளும் பரவிக் கிடக்கும் பாவம் என்னவெனில் 'விலையுயர்ந்த ஆடைகளை இச்சிப்பதுதான்'.

ஒரு ஆடை விற்பனை மாளிகைக்குள் நான் செல்லும்போது, அங்குள்ள 'காட்சி அறைகளில்' தொங்கிக் கொண்டிருக்கும் ஏராளமான ஆடைகளைக் கண்டு பிரமிப்படைவது உண்டு! அந்த கடைக்காரர் 'நவீன டிசைன்களுக்காக' எப்படியெல்லாம் தவித்துக்கொண்டிருப்பாரோ? என்பதை என்னால் உணர முடிந்தது.

*'இன்றைய நவீன ஆடை அலங்காரத்தை' ஜனங்கள் தங்களது தேவனாய் மாற்றிக்கொண்டார்களே! அப்படியெல்லாம், தங்கள் சரீரங்கள் ஜொலிக்கும் நவீன அலங்கரிப்பை இவர்கள் செய்தாலும், அதற்கும் அவர்கள் ஜீவிய குணத்திற்கும் ஒரு இம்மியளவு கூட சம்மந்தம் இருப்பதில்லை. தெய்வ குணாதிசயத்தின் அழகை பேதுரு எடுத்துக்கூறும்போது: "புறம்பான அலங்கரிப்பாகிய, மயிரைப் பின்னி பொன்னாபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்வது உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமான ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கும் குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே, தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது!" என கூறினார் (1பேதுரு 3:3,4).*

கவர்ச்சியான உடைகளை நாடும் இக்காலத்து மக்களுக்கு புத்திகூறுவதைப்போல் இயேசு உரைத்தது என்ன தெரியுமா? இந்த உலகத்திலுள்ள எவ்வளவு சிறப்பான அழகு வஸ்திரங்களைக் காட்டிலும், ஒப்பிட முடியாத வேறொரு சிறந்த அழகை "காட்டுப்புஷ்பங்களை கவனித்துப் பாருங்கள்" (மத்.6:28) என்ற காட்சியை முன் வைத்தார். இயேசு காண்பித்த காட்டு புஷ்பங்கள் கலிலேயா மலைச்சாரலில் விளைந்து கிடந்த கிளாடியஸ் பூக்கள், அனிமோஸிஸ் பூக்கள், நர்ஸிமோ பூக்கள், பாப்பி பூக்கள் ஆகிய அனைத்து பூக்களையும் உள்ளடக்கியே கூறினார். மேலும் "பார்த்தீர்களா இந்த அழகு வண்ணப்பூக்கள் விதைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை" என்ற உண்மையை அறிவித்தார் (வச.28). அந்த அழகு பூக்களில் ஒன்றுகூட "இன்று நான் நாள்முழுதும் இளஞ்சிவப்பாய் பூத்துள்ளேன், நாளை வான் ஊதாவாய் மாற விரும்புகிறேன்" என ஒருபோதும் சலிப்படைந்து கூறுவதேயில்லை!

உங்களைச் சுற்றியுள்ள அழகிய சாதாரண பூக்களை சற்று கவனித்துப் பாருங்கள். அத்தனை எளிமையிலும், வியக்கத்தகு அழகு இருப்பதைப் பாருங்கள்:

*மகத்துவ ராஜாவாய் இருந்த சாலொமோனுடைய அழகு வஸ்திரத்தை, 'மைக்ரோஸ்கோப்' நுண்கருவிக்கு கீழாக வைத்து சோதித்துப் பாருங்கள்! அதில் எப்படித் தெரிகிறது என்பதைப் பாருங்கள்: பார்த்தீர்களா, ஒரு சாக்கு துணியை பார்ப்பதைப்போல் கண்டிருப்பீர்கள்! அதேசமயம், ஒரு காட்டுப்புஷ்பத்தின் இதழை இந்த நுண்கருவிக்கு கீழ் வைத்துப் பாருங்கள்: அதில் நீங்கள் காணும் காட்சி உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டும்! அதன் அழகிய வண்ணம் என்ன! அதில் காணப்படும் நெசவு நயம் என்ன! சிதறியிருக்கும் வண்ணங்களின் பொலிவு என்ன! இவ்வாறு, நீங்கள் எத்தனை அழகு கவர்ச்சிகளை இந்த காட்டுப்புஷ்பத்தின் அழகோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும், இந்த மனங்கவரும் காட்டுப்புஷ்ப அழகிற்கு அவை இணையாயிருக்க முடியவே முடியாது!*

இப்போதாவது இந்த வசனத்தின் மேன்மையை புரிந்து கொள்ளுங்கள்: "இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத்.6:30) என்றே இயேசு சவாலாய் கூறினார். காட்டுப் புஷ்பங்களின் வாழ்க்கை சக்கரம் மிகவும் குறுகியது! உதிர்ந்து விழும் மலர்களை, எளிய ஜனங்கள் சேகரித்து, தங்கள் சமையல் அடுப்பிற்கு உபயோகப்படுத்தி எரிப்பார்கள். இவ்வாறு 'நிலையற்ற இந்தப் புல்லுக்கு' இத்தனை அழகை வாரி வழங்கியிருந்தால் 'நித்தியத்திற்குரிய தன் பிள்ளைகளுக்குத் தேவையான உடுப்புகளை கர்த்தர் தராமல் இருப்பாரோ?'

ஓர் பண்டைய ஆங்கிலப் பாடலில் ஒரு மலரும் சிட்டுக்குருவியும் பேசும் சம்பாஷணையில் 'இந்த உண்மை' கற்பிக்கப்பட்டுள்ளது:

**"ஓ சிட்டுக்குருவி, இங்கே வா! என,**
**அழைத்தது காட்டுப் புஷ்பம்!**
**'குருவியே எனக்கு நீ ஒரு**
**விடை சொல்ல வேண்டும்' :**
**அங்கே பார், அங்கும் மிங்கும்**
**ஓடியாடி செல்லும் மனுஷர்கள்!**
**அவர்களுக்கு ஏன் இந்த பதஷ்டம்?**
**எதற்காக இவ்வளவு கவலையோடு**
**ஓடித் திரிகிறார்கள்?" என கேட்டது.**

**மலரின் சந்தேகத்தைக் கேட்ட**
**குருவியோ சிரித்துவிட்டது:**

**“நண்பா நம்மைப் போஷித்து,**
**உடுத்துவித்து, பராமரித்திட, பரம தகப்பன்**
**உண்டு அல்லவோ! நாம் எவ்வளவு**
**மகிழ்ச்சியும் இளைப்பாறுதலும் பெற்று**
**நலமுடன் வாழ்கிறோம்.... ஆகவேதான்,**
**இப்போது எனக்கு ஓர் விடை தோன்றுகிறது,**
**அதுஎன்னவெனில்: “நம்மை காத்து பராமரிக்கும்**
**பரம தகப்பன் அவர்களுக்கு இல்லையோ?”**
**என்றே நான் எண்ணுகிறேன்!”**
**என விடை கூறி, பறந்து சென்றுவிட்டது!**

*இந்த செய்தியை வாசிக்கும் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, இனிமேலாவது ‘ஏதோ கவலை கொண்டோம்’ என எண்ணி விடாதீர்கள். நீங்கள் இப்போது வெளிப்படுத்திய முக்கிய காரியம் என்ன தெரியுமா? அதை இயேசுவே எடுத்துரைத்தார்:* **“அற்ப விசுவாசிகள்”** *(மத்.6:36). நீங்கள் மெய்யாகவே தேவனுடைய பிள்ளையாய் இருந்தால், அதற்குரிய தெளிவான விளக்கம் என்னவெனில் “பரலோகத்தில் எனக்கு ஒரு அப்பா இருக்கிறார்” என்ற உறுதியேயாகும்! இதற்கு மாறாக, நீங்கள் கவலையோடும் பீதியோடும் “நான் என்னத்தை புசிப்பேன்? நான் என்னத்தை குடிப்பேன்? நான் எதை வைத்து உடுத்திக்கொள்வேன்?” என நீங்கள் கேட்பவர்களாயிருந்தால், நீங்கள் உண்மையிலேயே யாராயிருக்கிறீர்கள் என்பதை தேவனே விடை கூறிவிட்டார்: “நீயோ என்னுடைய பார்வையில் ஒரு அவிசுவாசியாகவே இருக்கிறாய்” என்ற சோகமான அறிக்கையாகும்! இனிமுதலாவது, மனந்திரும்பி தேவனுடைய சொந்த பிள்ளையாய் மாறுங்கள் (வச.31,32). ஆமென்!*

*- ஜான் மேக் ஆர்தர்*

---

## ‘ஸ்தல சபையின் புனிதம்’ தேவராஜ்ய புனிதமாயிருக்க வேண்டும்!

*ஒரு சபை, தேவ ராஜ்ஜிய விதிகளை மாற்றக் கூடாது*

*தேவ ஆவியால் மறுபிறப்படைந்து, தேவ ஆளுகையைத் தங்கள் உள்ளத்தில் பெற்ற மக்கள் கூடி வரும் ‘சங்கமமே’ திருச்சபையாகும்! அப்படியொரு தூய சபை* **பெந்தெகொஸ்தே நாளில்** *உருவாகியதை காண்கிறோம். ஆகவே, தேவராஜ்யம் சபையை உண்டாக்கினதேயல்லாமல், சபை தேவராஜ்யத்தை உண்டாக்கவில்லை! தேவ ராஜ்ய பிரமாணங்களை மாற்றவும் கூடாது!*

*உலகத்தில் சபைகள் ஏராளமாகப் பெருகியிருக்கின்றன.*

*இவைகளில் ஒரு சபை தன்னை மார்தட்டி "நாங்கள்தான் தேவனுடைய இராஜ்யம்" என்று சொல்ல முடியாது. அவைகள் ஆராதனையில், ஆளுகையில், கொள்கைகளில், அபிப்பிராயங்களில், ஊழியங்களில், சிலாக்கியங்களில், சிட்சை செய்வதில் ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருக்கின்றன! ஆகிலும், வகைப்படுத்தி சொல்வோமென்றால்:*

*1) **ஒ**ருவராயிருந்து சர்வ அதிகாரம் செலுத்தும்போது அது **போப்** சபையாகும். 2) தன் எல்லைக்குள் அதிகாரம் செலுத்தும்போது அது **பிஷப்** சபையாகும். 3) அழைக்கப்பட்ட சிலரால் ஆளப்படும்போது அது **மூப்பர்** சபையாகும். 4) அவயவங்கள் எல்லாரும் சேர்ந்து ஆளும்போது, அது "**கிறிஸ்துவின் சரீரமான சபையாகவும்**" அதில் மேய்ப்பன் இருப்பான், கிறிஸ்து அதற்கு தலையாகவும் இருப்பார்! இவ்வாறு உலகத்திலுள்ள சபைகளில் பல வித்தியாசங்களைக் காண்கிறோம். அவரவர் 'தங்களுக்கு' நலமாகத் தோன்றினபடி சபையின் காரியங்களை ஏற்படுத்திக்கொண்டு போகிறார்கள்!*

ஆனால், நீங்கள் எப்படிப்பட்ட சபையாக இருந்தாலும், நீங்கள் முக்கியமாக விழிப்புடன் கவனித்து கண்காணித்திட வேண்டியதெல்லாம், "தேவனுடைய இராஜ்யத்தை" ஆளுகை செய்திடத் துணியும்படி, எந்த மனுஷனுக்கும் அதிகாரமில்லை! தேவ இராஜ்யத்தின் விதிகள் தேவனால் கொடுக்கப்பட்டவை! மனுஷர் அவைகளைத் தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு, அவைகளுக்குப் பூரணமாய் கீழ்ப்படியவேண்டுமே தவிர, அவைகளை மாற்ற அல்லது குறைக்க அதிகாரமில்லை! தேவனுடைய இராஜ்யம் மனுஷருடைய சடங்குகளுக்குள்ளும் சட்டங்களுக்குள்ளும் அடங்கினதல்ல!

*அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினால் வரும் சந்தோஷமுமாயிருக்கிறது!* **கிறிஸ்துவை இராஜாவாக ஏற்றுக்கொண்டு** *அவருடைய ஆளுகைக்குப் பூரணமாய் கீழ்ப்படிந்து நடப்பவர்கள் மாத்திரமே, தேவ இராஜ்யத்தின் புத்திரராவார்கள்!*

*__யா__ருக்குள் தேவனுடைய ராஜ்யம் பிரவேசிக்கிறதோ, அவர்களே தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பவர்கள்! ஏதோ ஒரு சபையில் அங்கங்களாக இருப்பதினால் மாத்திரம் தேவராஜ்யத்தின் புத்திரர் என்று நினைக்கக்கூடாது! 'ஒரு சபையில் இல்லாததினாலே' தேவராஜ்யத்துக்குப் புறம்பானவர்கள் என்று சொல்லவும் கூடாது!*

*ராஜாவாகிய ஆண்டவர், தம்முடையவர்களை இன்னாரென்று அறிவார்! "அநேகர் கிழக்கிலும், மேற்கிலுமிருந்து வந்து பரலோக இராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்" என்று ஆண்டவர் சொன்ன இரகசியத்தை*

நாம் அறிந்துகொள்ள வேண்டும் (மத்.8:11). ஆகையால், ஏதோ ஒரு சபையைக் குறித்து: இதுதான் தேவனுடைய இராஜ்யம் என்று சொல்லாமல், எல்லா சபைகளிலும் ஆவியினால் மறுபிறப்படைந்து, தேவ சித்தத்தின்படி பிழைக்கிறவர்களே, ராஜ்யத்தின் புத்திரராவார்கள் என்று சொல்லுகிறோம்! அதுவே தேவனுடைய இராஜ்யம்.

இப்படிப்பட்டவர்களைக் குறித்துதான் "நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு 'வரவழைத்தவருடைய' **புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு** தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், இராஜரிகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று பேதுரு சொன்னார் (1பேதுரு 2:9). தேவன் இஸ்ரவேலை ஆண்டு வந்த ஆதிகாலத்தில், அவர் அவர்களைப் பார்த்துச் சொன்ன ஆசீர்வாதமான வார்த்தைகளும் இவைகளே!

- பரமானந்தம் ஐயர்

---

## 'ஊழிய விஸ்தாரம்' சுய – நலமற்றதாயிருக்க வேண்டும்!

*உத்தம ஆவிக்குரிய ஊழியங்களுக்கே கைகொடுங்கள்*

கிறிஸ்துவின் ஆளுகைக்கும், வேதத்தின் அதிகாரத்திற்கும் தங்களை அர்ப்பணித்து, கிறிஸ்துவின் நற்செய்திக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாழும் விசுவாசிகளைப் 1) பெந்தெகொஸ்தே அனுபவ விசுவாசிகளென்றும், 2) பெந்தெகொஸ்தே அனுபவமில்லா விசுவாசிகளென்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆவியின் அபிஷேகம், வரங்களின் வெளிப்பாடு ஆகியவைபற்றிய அபிப்பிராய அல்லது அனுபவ வேறுபாடுகளே இதற்கு காரணம். முதற்குழுவில் 'சில காரியங்கள் வரம்பை மீறிவிடுகின்றன' என எண்ணும் இரண்டாம் குழுவினர் அதிக எச்சரிப்பாய் ஒதுங்கி நிற்பர்!

> "**உலகில் கிறிஸ்துவின் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால் இரு குழுவினரும் ஒருவரையொருவர் நேசித்து, பாராட்டி, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொண்டு வளரவேண்டுமென்பதே தேவ விருப்பம்!**

இரு தேற்றரவாளரின் ஊழியங்களும் ஒன்றையொன்று சார்ந்து நிறைவாக்குபவை. இரண்டாம் தேற்றரவாளன் (பரிசுத்த ஆவியானவர்) நம்மை முதலாம் தேற்றரவாளனுக்குள் (இயேசு கிறிஸ்து) ஞானஸ்நானம் பண்ணுகிறார். அடுத்து, முதலாமவர் இரண்டாமவருக்குள் ஸ்நானப்படுத்துகிறார்! முதற்செயல் (கிறிஸ்துவுக்குள்) நமக்கு அதிகாரத்தையும், இரண்டாம் செயல்

*(ஆவியானவர் மூலம்) நமக்கு வல்லமையையும் அருளுகிறது (1கொரி.12:13). மேலும், மெய்யான ஆவியின் அபிஷேகம் தேவ மக்களின் ஒருமனப்பாட்டிற்குத் தடையானவற்றையெல்லாம் ஆவியானவர் தகர்க்கிறார் (1கொரி.12:13).*

*எல்லா வரங்களும் ஒருங்கே விருத்தியடைய நாம் முயற்சிக்க வேண்டும். சில வரங்களில் தனிக் கவனமும் தேர்ச்சியும் அவசியம்தான்; ஆனால் மற்றவற்றை விட்டுவிட்டு அப்படிச் செய்யக்கூடாது! (1கொரி.12:17,19). "பலவீனமுள்ளவைகளாய்" அல்லது "கனவீனமாய்க்" காணப்படுகிற வரங்களை அற்பமாய் எண்ணவோ, அசட்டை செய்யவோ கூடாது! (1கொரி.12:21-24). குறிப்பிட்ட ஒரு சில வரங்களை மட்டும் 'அளவுக்குமீறி முக்கியப்படுத்துவது' நிச்சயமாய் பிரிவினைகளை உண்டாக்கியே தீரும் (1கொரி.12:25). ஒருவருக்கொருவர் கவனிப்பும், ஊக்குவிப்பும் காணப்பட்டால், வரங்கள் விருத்தியடையும் (1கொரி.12:25-27).*

*ஒரு நபர் ஏதாவதொரு வரத்தை வெளிப்படுத்துகையில் அதில் குறைவோ குற்றமோ இருப்பின், நியாயந்தீர்த்துவிட அல்ல, ஆனால் கரிசனையோடு உதவி செய்ய பிற அங்கத்தினர்கள் அவரைச் சந்தித்துப் பேசவேண்டும். அப்படியே, ஒருவன் ஒரு வரத்தை வெளிப்படுத்தும்போது, மகிமையாய் வெற்றி காணும்போது, மற்ற அங்கத்தினர்கள் எவ்விதத்திலும் பொறாமைக்கு இடங்கொடாமல் அவரோடு சேர்ந்து களிகூரவேண்டும்! (1கொரி.12:26).*

*சபைகளுக்கிடையேயுள்ள ஊழியத்திற்கும், வெளியுலக ஊழியத்திற்கும், உள்ளூர் சபைக்குள்ள ஊழியத்திற்கும் தேவன் சபையில் ஏதுக்களைத் தந்துள்ளார். நமக்கு மூவகைக் கடமைகளுண்டு: 1) நமது சொந்த உள்ளூர் சபையின் அங்கத்தினருக்கு ஊழியம்; 2) மற்ற சபைகளின் அங்கத்தினருக்கு ஊழியம் 3) சபைக்கு வெளியேயிருக்கும் 'பொது மக்களுக்கு' ஊழியம்! இக்கடமை அல்லது பொறுப்பின் அளவும் தன்மையும் எல்லாருக்கும் ஒன்றுபோலிராது (1கொரி.12:2830).*

> "
> **எல்லாரும் அப்போஸ்தலரல்ல, ஆனால் எல்லாரும் அப்போஸ்தலரைத் தாங்க வேண்டும்; எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவரல்ல, ஆனால் எல்லாரும் இத்தகைய நற்செய்தி ஊழியரை ஊக்குவிக்க வேண்டும்; எல்லாரும் சபையில் ஆளுகிறவர்களல்ல, ஆனால் எல்லாரும் இவ்விதத் தலைவரோடு ஒத்துழைக்க வேண்டும்! (1கொரி.12:26-30).**

*தேவனிடம் இரண்டாந்தர அல்லது மூன்றாந்தர வரங்கள்*

கிடையாது. "**முக்கியமான**" **வரங்கள் என்பது அந்தந்த சூழ்நிலைக்கு "மிகப் பொருத்தமான" வரங்களைக் குறிக்கும்.** ஆவிக்குரிய வரங்களைச் செயல்படுத்துவதில் அடிப்படை நோக்கம் அன்பாக இருக்க வேண்டும்! இங்கு "அன்பு" என்பது பிறருக்குப் பணி செய்யும் கரிசனையாகும். இதுவே "அதிக மேன்மையான வழி" என குறிப்பிட்டார்! *(1கொரி.12:31; 14:6,12).*

பிறருக்குப் பணி அல்லது ஊழியம் செய்து அவர்களுக்கு பக்தி விருத்தி உண்டாக்கும் **உண்மையான வாஞ்சையின்றி,** பற்பல பாஷைகள், தீர்க்கதரிசனம், ஞானம், அறிவு, விசுவாசம் போன்ற ஆவிக்குரிய வரங்களை வெளிப்படுத்துவது சாத்தியம், ஆனால் அது மேன்மையல்ல! தேவன் நியமித்துள்ள பூரண பலனை வரங்களினால் பெற வேண்டுமானால், சுய நோக்கத்தை அறவே ஒழிக்க வேண்டும்!

*- R.ஸ்டான்லி BYM*

---

## சகோதரனைக் கொல்வதோ? கவனமாயிருங்கள்!

*நிலைத்திருக்கும் 'சகோதர சினேகம்' வேண்டும்*

**ஆ**திநாட்களில், முதல் 'மனுஷனாய்' பூமியில் பிறந்த காயீன், நிலத்தை பயிரிட்டான்! பின்பு பிறந்த ஆபேல், ஆடுகளை மேய்த்தான்! என்பதே முதல் செய்தியாய் துவங்குகின்றது (ஆதி.*4:1,2*). அதைத் தொடர்ந்த வேறுபாடுதான், நமக்கு மிக முக்கிய செய்தியாய் மாறுகிறது!

> ***கா****யீன், தன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்கு காணிக்கையாய் கொண்டு வந்தான்..... ஆபேல், தன் மந்தையின் தலையீற்றுகளிலும் "அவைகளில் கொழுமையானவைகளிலும்" சிலவற்றைக் கொண்டுவந்தான்! இங்குதான் ஆவிக்குரிய அல்லது கர்த்தருக்கு அர்ப்பணித்த தேவஜனம் வேறுபடுகிறார்கள்!*

1. காயீனையும், அவன் கொண்டு வந்த காணிக்கைகளையும் கர்த்தர் அங்கீகரிக்கவில்லை!
2. ஆபேலையும், அவன் கொண்டுவந்த காணிக்கைகளையும் கர்த்தர் அங்கீகரித்தார்! (ஆதி.*4:4*).

இருவரும் ஒரேவிதமாய் கர்த்தரிடத்திலிருந்து பெற்றாலும், ஆபேல் மாத்திரமே தன் கர்த்தரை "முதற்பலனால்" (THE BEST) கனம் செய்தான்! (நீதி.*3:9*). அந்த மேன்மையான **'முதற்பலன்' அர்ப்பணிப்பு** காயீனிடத்தில் காணப்படவில்லை! வெறும் காணிக்கைதானே, என நாம் எண்ணினாலும், "நம் முழு கிறிஸ்தவ அர்ப்பண ஜீவியமே" கேள்விக்குள்ளாகும் நிலைமை, நம் யாவருக்கும் எச்சரிக்கையாய் இருக்கிறது!

**"இருவரும் கிறிஸ்தவர்கள்தான்.... ஆனால் ஒருவன் தேவனுக்கும், அவர் ராஜ்ஜியத்தின் நீதிக்கும் எப்போதும் "முதலிடம்" கொடுத்தான்! (மத்.6:33). மற்றொரு கிறிஸ்தவனோ, தேவனுக்கு "முதலிடம் கொடுத்து" அவரை கனம் செய்யவில்லை என்ற துயரமே திரளான கிறிஸ்தவர்களை ஆண்டுகொண்டுள்ளது!**

*ஆகவே, அவர்கள் கையிட்டு செய்திடும் யதொரு பிரயாசத்திலும் தேவராஜ்ய சமாதானம், மகிழ்ச்சி, மனநிறைவு இருப்பதில்லை!*

*இவ்வாறு, தேவனுக்கு முதலிடம் தராததினிமித்தம் நஷ்டம் ஏற்பட்டவர்களின், அடுத்த செயல் யாதெனில் "கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்ட" சாதாரண சொந்த சகோதரன் ஆபேலையும், அவன் கிரியைகளையும் கண்டு பொறாமையும், எரிச்சலும் அடைந்து, ஆபேலுக்கு தீங்கு செய்திட ஆரம்பிக்கிறார்கள்!*

*அதன் விளைவாய் "அவர்களுக்கு மிகவும் எரிச்சலும், முகநாடி வேறுபாடும்" சம்பவித்தது! (ஆதி.4:6). 'தன் சகோதரனுக்கு' தேவன் தந்த ஆசீர்வாத அங்கீகாரங்களில் காய்மாரம் கொண்டிடும் மாந்தர்களே, இன்றைய திரளான கிறிஸ்தவர்களாய் இருக்கிறார்கள்!*

*எல்லாவற்றிற்கும் காரணம் என்ன? "தான், ஆபேலைப்போல் கர்த்தரை கனம் செய்து அவருக்கு முதலிடம் தரும் நன்மை" தங்களிடம் இல்லை அல்லது குறைந்துவிட்டது என்பதையாவது கண்டிட திரளான கிறிஸ்தவர்கள் தவறிவிட்டார்கள்! 'சகோதரத்துவம்' 'சகோதர அன்பு' 'சகோதர ஐக்கியம்' சீர்குலைந்து, களங்கமற்ற பேதமையான சகோதரனிடம் சம்பாஷித்து 'தன் வயலுக்கு' அழைத்து வந்து, திடீரென்று அவன்மேல் பாய்ந்து கொலையும் செய்துவிடுகிறார்கள்!*

**"இரத்தம் சிந்திவிட்டு" ஒன்றும் செய்யாததுபோல் காயீன் நடந்துகொண்ட விசித்திரத்தையும் பாருங்கள்!**

*நம் வாழ்வில் தரப்பட்ட 'சகோதரர்' அனைவருக்கும் ஒருவருக்கொருவர் அன்பிற்கு நாம் காவலாளிதான்! ஆனால் அவர்களோ, தேவன் தந்த பொறுப்பை சிறிதும் உணராமல் "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?" (ஆதி.4:9) எனக்கூறி நிர்விசாரம் கொள்கிறார்கள்!*

*நாமோ, விழிப்படைந்து "சகோதர சினேகம் நிலைத்திருக்கவே" எப்போதும் ஆர்வம் கொண்டிருப்போமாக! (எபி.13:1). சகோதர சினேகத்தை பாதுகாத்திடும் உத்தம சபைகளை, தேவன் தன் நாம மகிமைக்கென்று எழுப்புவாராக! ஆமென்.*

*- T.ரத்தினகுமார்*

## 'ஜெப – தியான' இரகசியங்களை போதித்தவர்!

# பிரான்ஸிஸ் ஆப் சாலஸ்



17-ம் நூற்றாண்டில் வாழ்ந்த "பிரான்ஸிஸ் ஆப் சாலஸ்" ரோமன் கத்தோலிக்க காலத்தில் வாழ்ந்த சிறந்த பரிசுத்தவான்! ஜெனிவா பிஷப்பாக, சுமார் 20 வருடம் ஊழியம் செய்த அக்காலத்தில் "தேவனுடைய பிரசன்னம் நாடும் தியான வாழ்க்கையை" தன் ஜீவியத்திலிருந்து போதித்து, அனேகருக்கு ஆத்தும வழிகாட்டியாய் திகழ்ந்தார்!

தன் 24- வயதில், சட்டப்படிப்பை முதன்மையாய் படித்து முடித்த சமயத்தில், இளவரச பரம்பரையிலிருந்து திருமணம் செய்ய முயற்சி நடந்தது. அதோடு, உயர்ந்த அரசு பதிவியிலும் வாய்ப்பு பெற்றார்! ஆனால் அவரோ, சபையின் புனித வாழ்வே மேன்மை என தெரிந்துகொண்டு, 1593-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 'பாதிரியாராக' நியமனம் பெற்றார்! குறைவான 4-வருடத்தில், அவருடைய புனித வாழ்க்கையின் பிரதிபலிப்பாய் ஜெனிவா பிஷப்பாக பொறுப்பேற்றார்! அவருடைய புனித வாழ்க்கையின் பிரதான பின்னணி "கர்த்தரோடு இசைந்திருக்கும் தியான வாழ்க்கையே" ஆகும்! அவர் அறிமுகப்படுத்திய தியான வாழ்க்கை "தேவனுடைய பிரசன்னம் பிரவேசிக்க வேண்டும்" என்ற வலியுறுத்தலாய் இருந்தது! அதை நான்கு பகுதிகளாய் ஜெப நேரத்தில் அப்பியாசப்படுத்த முடியும் எனவும், அனேகரை கர்த்தருடைய சமூகம் பிரவேசித்திட நடத்தினார்!

1) ஒரு பறவை, எங்கு சென்று பறந்தாலும் "பிராண வாயு காற்றை" சுவாசிப்பது போல், நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும், எங்கு சென்றாலும் "அங்கே கர்த்தருடைய சமூகம்" பிரவேசித்திட முடியும்!

2) ஒரு குருடனிடம் "இளவரசர் வந்திருக்கிறார்" என கூறப்பட்டவுடன், அவரை அவன் காணாவிட்டாலும் 'அவரது வருகைக்கு' மிகுந்த மரியாதை காட்டுவான்! அதுபோலவே, ஜெபத்தில் தன் கர்த்தருக்கு முன் பயபக்தி செலுத்தி அமருவான்!

3) தன் இருதயத்தில் வாசம் செய்ய விரும்பும் தேவனை, மிகுந்த வரவேற்புடன் அவரை தன் 'ஆவியின் மையத்தில்' ஏற்று, தியானத்தில் மகிழ்ந்திருப்பான்!

4) ஜெபத்தில் அமர்ந்திருக்கும் தம்முடைய பிள்ளைகளை, பரமண்டலத்திலிருந்து நோக்கிப் பார்த்திடும் தேவன், "மானிடனாய் மனுஷரிடம் வந்த இரட்சகபெருமானாய்" தம்முடையவர்களோடு, நெருங்கி வந்து உறவாடுவார்! இவ்வாறு ஜெப-தியான இரகசியங்களை அனேக பரிசுத்தவான்களுக்கு அவர் கற்றுக்கொடுத்தார்! இன்னும் அவைகள் உயிரோட்டமாய் நம் எல்லோருக்கும் உள்ளது!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## ஓ வாலிபனே, கிறிஸ்துவுக்குள் கனிகொடுத்து வாழ்வாயாக!

ஓ கிறிஸ்தவ வாலிபனே! நீ ஒரு கனிதரும் செடியாக இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகின்றார். வாலிபனே, உனது மெய்யான சந்தோஷமானது நீ வாழும் மாயையான பாவ பழக்கத்தில் இல்லை! 'மது, மாது' என எத்தனை வாலிபர்கள் சீரழிந்தார்கள்! இன்னும் அனேகர் பணம், மதிப்பு, கௌரவம் என தேடி 'நாகரீக வழியில்' சீரழிகிறார்கள்! இவைகள் அல்ல, இவை அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாய் மாய்ந்து அழிந்துவிடும். எக்காலத்திலும் மாறாத சந்தோஷம் 'உன் சிருஷ்டி கர்த்தாவிடம் மாத்திரமே' உண்டு! இரட்சகராய் இவ்வுலகத்திற்கு வந்த ஆண்டவர் இயேசுவை விசுவாசித்து, உன் பாவ சேற்றிலிருந்து இரட்சிக்கப்பட்டு, பாவம் மன்னிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளையாய் மாறுவதேயாகும்! மேலும், தேவ சமூகப் பிரசன்னத்தின் ஒளியில் நீ தொடர்ந்து வாழ்ந்து, நிறைவான கனிகொடுப்பதையே தேவன் விரும்புகிறார்!

தேவனுடைய விருப்பத்தின்படி வாழ்ந்திட, வேதவாசிப்பும், தனிஜெப வாழ்க்கையும் கிறிஸ்துவில் நாம் நிலைத்திருக்கக்கூடிய அடிப்படை ஆதாரங்களாய் இருக்கிறது! இன்னும் வலுமிக்க ஆதாரம் என்னவெனில், தேவ சமூகத்தின் பரிசுத்த பிரசன்னத்தைத் தொடர்ச்சியாக உணர்ந்து வாழும் பரிசுத்தாவியின் அபிஷேக வாழ்க்கையாகும்!

வாலிபனே, கிறிஸ்துவின் பிரசன்னத்தை இரவும், பகலும் நீ அப்பியாசிக்கப் பழகிக்கொள்ளுதல் உனக்கு எத்தனை அவசியமானது என்று நீ மதிக்கின்றாய்? நமக்களிக்கப்பட்டப் பரிசுத்த ஆவியானவரை, நமது பாவத்தின் மூலமாக நாம் துக்கப்படுத்தாதிருக்கும்படியாகவும், நமது மூர்க்க குணத்தின் மூலமாகப் பரிசுத்த ஆவியை நாம் அவித்துப்போடாதிருக்கும்படியாகவும், தேவ சமூகப் பிரசன்னத்தை நாம் அப்பியாசித்தல் மிகவும் அவசியமாகும்!

இவ்வாறு நிரந்தரமாய், நித்தியத்திற்குரிய கனியுள்ள வாழ்க்கை வாழ்ந்திடவே, நீயும் அழைக்கப்பட்டிருக்கிறாய் என உணர்ந்து வாழவே, கர்த்தர் உன்னை அழைக்கிறார்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**